# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.

## S.C.No.126/2013

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.11** |
| **Name** | **:** | **திரு. என். வெங்கடேசன்** |
| **Father's Name** | **:** | **திரு. நாகப்பன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.07.2026.**

**முதல் விசாரணை -**

நான் காவல்துறை துணை கண்காணிப்பாளராக வேலூரில் பணிபுரிந்து கடந்த 31.03.2025 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 13.05.2012 அன்று மோரணம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. டோமினிக் சேவியர் என்பவர், திருமதி.மாயா என்பவரிடம் எழுத்து மூலமாக புகாரைப் பெற்று மோரணம் காவல் நிலைய குற்ற எண்.185/2012, சட்டப்பிரிவு 302 இ.த.ச.வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்திருந்தார்.

அன்றைய தினம் 13.05.2012 தேதி காலை 8.00 மணிக்கு சம்பவ இடமான

குன்னத்தூர் காலணி, வாதியின் வீட்டின் அருகே சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் 1. பெருமாள், 2. பாஸ்கர் ஆகிய இருவர் முன்னிலையில் காலை 8.30 மணி முதல் 10.00 மணி வரையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.7 சாட்சி மூலம் அ.த.சா.ஆ.2-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் ஏற்கனவே அ.சா.7 சாட்சி மூலம் அ.த.சா.ஆ.3-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

பின்பு சாட்சிகள் மாயா, கன்னியப்பன், விஜயகுமார், தனசேகர், தேவன், பாபு, பெருமாள், பாஸ்கர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன். பின்பு இவ்வழக்கில், சம்பவ இடத்தில் சாட்சிகள் பெருமாள், பாஸ்கர் ஆகிய இருவர் முன்னிலையில் இரத்தம் தோய்ந்த மண் மற்றும் இரத்தம் கலவாத மண் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பின்பு காலை 11.30 மணி முதல் 13.30 மணி வரை இவ்வழக்கில் இறந்து போன நாராயணசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தாரர்கள் பெருமாள், ராஜேந்திரன், முருகன், வேதபுரி, வேணுகோபால் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரரணை மேற்கொண்டேன்.

அந்த பிரேத விசாரணை அறிக்கை **<u>அ.த.சா.ஆ.13-ஆக</u>** குறியீடுச் செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை அலுவலக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மோகன் என்பவரை நியமித்துக் கொண்டேன். பின்பு மாலை 3.00 மணியளவில் நான் மோரணம் காவல் நிலையத்தில் இருந்த போது, குன்னத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. லதா தமிழ்மணி, கிராம உதவியாளர் திருமதி. ராஜேஸ்வரி, திரு. செல்வம் ஆகியோர் இவ்வழக்கில் கண்ட எதிரி சுந்தரமூர்த்தி

என்பவரை ஒரு தனி அறிக்கையுடன் என்னிடம் ஆஜர் செய்தனர்.

பின்பு நான், அதே சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் லதா தமிழ்மணி மற்றும் கிராம உதவியாளர் ராஜேஸ்வரி ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.8 மூலம் அ.த.சா.ஆ.8-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரி சுந்தரமூர்த்தி என்பவரை சம்பவ இடத்திற்குச் அழைத்துச் சென்று அவரை விசாரித்த போது அவர் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார்.

மாலை 4.00 மணியளவில் எதிரி பயன்படுத்திய முள்வேலி கொம்பு சுமார் 3 அடி நீளமுள்ளது சாட்சிகள் ராஜேஸ்வரி, செல்வம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.8 மூலம் அ.த.சா.ஆ-9-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து முறைப்படி கனம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிக் கொண்டேன். பின்பு 14.05.2012 அன்று நாகராஜ், ராஜசேகர், குமார், மோகன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன்.

பின்பு இவ்வழக்கில், 22.06.2012 அன்று உதவி இயக்குநர், வேலூர் தடய அறிவியல் ஆய்வகம், திரு. அசோக் குமார் என்பவரை விசாரித்து விஸ்ரா அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன். அந்த விஸ்ரா ஏற்கனவே அ.சா.10 மூலம் அ.த.சா.ஆ-12-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. பின்பு, இரத்தம் கலந்த மண் மற்றும் இரத்தம் கலவாத மண் ஆகியவற்றை ஆய்வுசெய்த தடய அறிவியல் நிபுணர், வேலூர் திரு. ஜெகநாதன் என்பவரையும்

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

பின்பு 05.07.2012 அன்று இறந்த நாராயணசாமி என்பவரின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட மருத்துவர் மகேஷ்ராம், அரசு மருத்துவமனை, செய்யாறு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, பிரேத பரிசோதனை அறிக்கையைப் பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.10 மூலம் ஏற்கனவே அ.த.சா.ஆ-11-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

பின்பு இவ்வழக்கின் அனைத்து புலன் விசாரணையையும் முடித்து 14.07.2012 அன்று எதிரி மீது சட்டப்பிரிவு 302 இ.த.ச.வின் கீழ் உதவி இயக்குநர், குற்ற வழக்கு தொடர்வு, திருவண்ணாமலை அவர்களிடம் கருத்துரை பெற்று நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செய்யாறு அவர்களிடம் இறுதி அறிக்கை தாக்கல் செய்துக் கொண்டேன். நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நான் பதிவு செய்துக் கொண்டேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

நான் இந்த வழக்கினை என்று, எப்போது, எந்த நேரத்தில் என் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 13.05.2012 அன்று காலை 8.00 மணிக்கு என் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். என்னுடைய உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை எந்த நேரத்தில் எந்த தேதியில் பதிவு செய்துக் கொண்டார் என்றால் 13.05.2012 அன்று காலை 6.30 மணியளவில் பதிவு செய்தார்.

சம்பவ இடத்திற்கு நான் எந்த தேதியில் எத்தனை மணியளவில் சென்றேன் என்றால் 13.05.2012 அன்று காலை 8.30 மணிக்குச் சென்றேன். சம்பவ இடத்திற்கு 8.30 மணிக்குச் சென்று பார்வை மகசரை எப்போது தயார் செய்தேன் என்றால் 9.15

மணி முதல் 10.00 மணி வரை தயார் செய்தேன். மாதிரி வரைபடம் 8.30 முதல் 9.00 மணியளவில் தயார் செய்தேன். முதலில் நான் மாதிரி வரைபடம் தான் தயார் செய்தேன், அதன் பின்பு தான் பார்வை மகசரை தயார் செய்தேன்.

முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடம் என்று எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் குன்னத்தூர் காலனி, வாதி வீட்டின் முன்பு என்று குறிப்பிட்டுள்ளேன். பார்வை மகசரில் சம்பவ இடம் என்று எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் பஜனை கோவில் தெரு, வாதி வீட்டியின் முன்பு என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் பார்வை மகசரில் சவமான நாராயணசாமி என்பவரின் ஓட்டு வீட்டின் முன்பு என்று சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

JAYASREE C

Digitally signed by JAYASREE C
Date: 2026.07.02 17:27:40 +0530

Additional Sessions Judge,
Arani.